C.C.No.189/2010 06.04.2026

PW6 **சேக்பாபு த/பெ.ஹனிபா**

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**எதிரிதரப்பில் சாட்சியை மீண்டும் விசாரிக்க குவிமுச பிரிவு 311ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு சாட்சியம் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாராணை**

நான் காவல் நிலையத்திற்கு போலீசாரிடம் அழைப்பாணை பெற்று சென்றேனா என்றால் போலீசாரிடமிருந்து தொலைபேசி மூலம் பெறப்பட்ட அழைப்பின்மூலம் சென்றேன். எந்த போலீசார் என்னை அழைத்தார் அவரது பெயர் தெரியுமா என்றால் 2010ம் வருடம் என்பதனால் ஞாபகம் இல்லை. இதுவரை எத்தனை வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அரசு தரப்பில் சுமார் 15 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல, எனது முன்னிலையில்தான் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, காட்டு ராஜா மற்றும் 3 நபர்களை விசாரித்துக்கொண்டிருந்தார்கள், ஓரளவிற்கு அதில் உள்ள விவரம் தெரியும். எனக்கு எந்த விவரமும் தெரியாது, எனது முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை, நான் காவல் நிலையத்தின் காவலர்கள் அழைத்தால் சாட்சியம் அளிப்பவர் என்பதால் அரசு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முன்னி லையில் எந்த பொருளும் பைப்பற்றவில்லை என்றால் சரியல்ல, காவல் ஆய்வாளர் அரிட்டாபட்டி கிராமத்தில் காட்டு ராஜா வீட்டிலிருந்து 4 பவுன் சங்கிலி போல் இருந்த நகையை இரவு 01.00 மணியிலிருந்து 02.00 மணிக்குள் எனது முன்னிலையில் கைப்பற்றினார்கள்.

2) மேற்கூறிய காட்டு ராஜாவின் வீடு காட்டை ஒட்டி உள்ளதா அல்லது ஊருக்குள் உள்ளதா என்றால் இருட்டு நேரம் என்பதனால் ஞாபகம் இல்லை,

மந்தைக்கு அருகே வண்டி நின்றது, பொருளை கொண்டு வந்து காட்டு ராஜா கொடுத்தார். காட்டு ராஜாவின் வீடு எந்த வகையான வீடு என்றால் காட்டு ராஜாவின் வீடு எனக்கு தெரியவில்லை. மேற்கூறிய நகை அருந்திருந்த சங்கிலியா அல்லது முழு சங்கிலியா என்றால் அது தங்க பொருள் என்று தெரியும், இருட்டு நேரம் என்பதால் சரியாக தெரியவில்லை. நான் சொன்னதுபோல் எந்த பொருளும் கைப்பற்றவில்லை, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.